ஓம் சரவணஜோதியே நமோ நம

ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

**23.07.2026**

1. கருணைக் கடலே கந்த வேலா
காப்பேன் என அருளும் சண்முகவேலா
ஆறுமுக அரங்கனும் உம்மை போற்றி
அருளுவேன் பராபவ நள்ளி திங்களில்

2. திங்களில் முதல் குருவார அருளாசி
தெய்வீகமும் கருணையும் உலகை ஆள
ஓங்காரம் உலகில் நிரம்ப உரைப்பேன்
ஓங்கார குடிலெனும் ஞானசபை தேடி

3. தேடியே கலியுக மக்கள் வந்து
தெரிவிப்பேன் சரணாகதி கொண்டு
ஆடி திங்களில் அருள்சோதி ரூபிலே
அரங்கன் என்னை கண்டு வணங்கி

4. வணங்கி அருளமுது உண்டு
வளமும் வல்லமையும் தா என
வணங்கி வேண்டுதல் தொடர
வறுமையும் பிணி கஷ்டமும் நீக்கி

5. நீக்கி தேகமன பலமுடன் திட தேட்டு
நிலைபெறும் பொருளாதார பலமும்
ஆக்கை நலம் ஆயுள் கீர்த்தியும்
அருள்பலமும் தந்தருள் புரிவேன்

6. புரிதலுடன் என் தடம் நோக்கி
பொருளுதவி மாதரும சேவையில்
பெரிய அளவில் செய்து கொண்டு
புகலுவேன் உடல் உழைப்பும் தந்துவர

7. வருகவே வருங்காலம் தன்னில்
வம்சங்களும் உங்கள் சேவையாலே
ஆறுமுகனாருடன் அரங்கன் எந்தன்
அனுகூலம் கிட்டி ஞானம் விட்டகலா

8. அகலா ஞானவான்களாகச் சிறந்து
அப்பனே மேன்மை அடைவர்

செகமே வேலவன் ஆளுமை
செய்திடும் வண்ணம் மாற்றம்

9. மாற்றம் ஓங்கார பூசை பரவ
மக்களெல்லாம் வேலவன் மேலான
பற்று மிகுந்திட எங்கும் பிரணவம்
பாதுகாத்திடும் மகா சக்தியாக நிரம்பி

10. நிரம்பி எங்கும் யாவற்றிலும்
நிலைத்து நின்று வேலவனே
ஆரம்பம் முடிவும் அனைத்துமாக
அற்புதம் படைத்திட நேருமப்பா

11. அப்பனே என் வழி வர
அகிலம் ஞானவான்கள் படை
காப்பாக நிரம்பிட மாற்றமும்
கந்தனே நடத்திட அறிய நேரும்
ஆறுமுக அரங்கனென் குருவார அருளாசி முற்றே.

—சுபம்—

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி